1992 ஏப்ரல் 20]

மாவட்டத்திலுள்ள கோவில்களப்பாலில் அதுபோன்ற எரிவாயு கிடைக்கிறது. அங்கேயும் மின்சாரம் தயாரிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற அந்த எரிவாயு மூலம் மின்சாரம் தயாரிக்கின்ற நிலையத்தைத் தவிர இன்றைக்கு பிள்ளைப்பெருமாள் நல்லூரில் 600 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டு ஏற்கெனவே 300 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு மத்திய திட்டக் குழுவினுடைய ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, பிள்ளைப் பெருமாள் நல்லூரில்தான் இந்த மின் உற்பத்தி நிலையத்தை துவக்குவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 561, திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

561—

மின் அழுத்தம் குறைந்த டிரான்ஸ்பார்மர்களை சரிசெய்தல்.

*4466—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியத்தில் மின் அழுத்தம் குறைந்த டிரான்ஸ்பார்மர்களை சரிசெய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடையம் ஒன்றியத்தில் டிரான்ஸ்பார்மர்கள் சரியாக செயல்படாததால் மின் அழுத்தம் மிகக் குறைவாக இருப்பதால் கிராமப் பகுதிகளில் மின்வெளிச்சம் இல்லாத நிலை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் ' ஆம் '

என்று சொன்னார்கள். நான் இப்பொழுது என் தொகுதிக்கு சுற்றுப்பயணம் செய்து இந்தப் பகுதியை பார்வையிட்டபோது மீண்டும் அதே நிலைதான் நீடித்துக் கொண்டிருக்கிறது. அதனால் அமைச்சர் அவர்கள் மீண்டும் அந்த டிரான்ஸ்பார்மரை தேவையான அளவுக்கு, அமைப்பதோடு மட்டுமல்லாமல் ஒரு டிரான்ஸ்பார்மருக்கு இத்தனை இணைப்புகளைதான் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயித்து கிராமப் பகுதிகளில் உள்ள இதனை சீர்செய்து இந்தப் பிரச்சினையை சரி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியத்தின் மாதாபட்டணம், செல்லப்பிள்ளையார்குளம், பாப்பான்குளம் போன்ற பகுதிகள் மின் அழுத்தம் குறைவாக நிலவிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டு அதற்குப் பின்னாலே மின் அழுத்தத்தினை சீர் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது மேம்பாட்டுப் பணிகளுக்காக நிதி ஒதுக்கியிருக்கிறோம். ஆகவே, இந்தப் பணிகள் தொடங்கப்பட்டு முடிவடைந்த பிறகு மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் இந்த குறைவான மின் அழுத்தம் என்கிற பிரச்சினை இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு ஒன்றை மட்டும் நான் இந்த அவையிலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த 'லோ வோல்டேஜ்' என்று சொல்லப்படுகிற மின் அழுத்தம் குறைவு என்பது நம்முடைய இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலே வந்ததல்ல. நெடுநாளாக இருக்கிற பிரச்சினைகளை நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்குப் பின்னாலேதான் நீங்கள் நன்றாக அறிவீர்கள், மின்சார வாரியம் ஓராண்டு காலமாக எப்படி செயல்படுகிறது என்பதையும், இன்றைக்கு கோடையிலேகூட மின் வெட்டு இல்லை என்கின்ற அளவுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிற சூழ்நிலையையும் (மேசையைத் தட்டும் ஒலி) 1948 ஆம் ஆண்டிலிருந்து இந்த மின்சார வாரியத்தினுடைய பணிகள், கடந்த ஓராண்டு காலமாக எவ்வளவு செம்மைப்படுத்தப் பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். ஆகவே, இருக்கின்ற நிதி நிலையைப் பொறுத்த மட்டிலே அனைத்து காரியங்களையும் ஒரே நேரத்திலே செய்ய முடியாது என்ற காரணத்தாலேதான் பிரச்சினைகள், புகார்கள் இருக்கின்ற இடங்களிலே அவைகளை எல்லாம் அரசு ஆய்ந்து மின்சார வாரியம் முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆகவே, எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினை அடியோடு களையப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1992 ஏப்ரல் 20]

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினை முந்தைய காலத்திலிருந்தது என்று சொன்னார்கள். இது முந்தைய காலத்தில் இருந்ததுதான். ஆனால் நம் ஒப்பற்ற புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் கிராம மக்களுடைய நலனே தன்னுடைய நலனாகக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தினால் இந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து விரைவாக இந்தக் குறைபாடுகளை நீக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல நம்முடைய அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்கு பின்னாலேதான் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நம்முடைய உறுப்பினர் தொகுதியிலுள்ள மாதாபட்டணம், செல்லப் பிள்ளையார்குளம் மற்றும் பாப்பான்குளம் போன்ற பகுதிகளிலுள்ள மின் அழுத்தக்குறைவினை சீர் செய்வதற்கு உடனடியாக நிதி வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்று தெரிவித்தேன். ஆகவே, வெகு விரைவில் இந்தப் பணிகள் துவங்கப்பட்டு அந்தப் பகுதியினுடைய மின் அழுத்தம் சீர் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 562, திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

562—

பாலம் கட்டுதல்.

* 9856—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி கறம்பக்குடி ஒன்றியத்தில் உள்ள திருமணஞ்சேரிக்குச் செல்லும் பாதையின் பாலம் கட்டும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) இந்த பாலத்திற்கு இந்த நிதியாண்டில் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

(இ) பாலம் கட்டும் வேலை எப்பொழுது ஆரம்பிக்கப் படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,